SEND IN YOUR NEWS TO THE EDITOR
THE MORNING STAR
36, 5/2 Sinsapa Road,
Colombo - o6
Sri Lanka

THE MORNING STAR
உதயதாரகை
uthayatharakai
Registered as a News paper at the General Post Office, SriLanka
Eastablished 1841, A Christian Fortnighty Published Every other Friday
Vol. 176 - Jaffna - Friday 26 June 2009 - No. 07
Righteousness Exalteth A nation, But Sin is a Reproach to any People

Foreign:
Annual subseription $ 10.00
Life subscription $100.00
Local
Annual subscription Rs. 100.00
Life Subseription Rs.1000.00
www. csijaffnadiocese.com
Editor
36, 5/2 Sinsapa Road,
Colombo - o6
Sri Lanka

# "Time for us to place the yoke on our shoulders"



Bishop Thiagarajah on his team's visit Vavuniya and Cheddikulam

*report from the secretary of the JDCSI I. Rajkumar in Jaffna*



"To give people purpose, and for their lives to make a difference"

*Bishop Daniel S. Thiagarajah*

**Here I am Lord, Is it I Lord?**
**I have heard you calling in the night.**
**I will go Lord, if you lead me.**
**I will hold your people in my heart.**

Hymn composed by Dan Schutte in 1981 its words are based Isaiah 6:8 and 1 samuel 3

Many German cities and townships were devastated extensively during World War II and civilians everywhere were severely affected, many lived under appalling conditions in under-ground shelters, thousands perished and the war left the country and the people reeling. All these just seven decades ago commented the head of the Jaffna Diocese of the Church of South India, the Rt Rev Dr Daniel S. Thiagarajah during his recent visit to Vavuniya and Cheddikulam along with a team from his Church.



*By I. Rajkumar, Secretary JDCSI*

He was accompanied by his wife Dr Thaya Thiagarajah a trauma counselor and the Reverends Srilal, Chelvan, Pathmathayalan and Thevaharan and Ms Amutha and Mr Dharmalingam to have an on the spot assessment of the situation and to see how best the JDCSI can help with the efforts that are being made for rehabilitation of the displaced, assist with health programmes but even more, the redevelopment of the Wanni.

Referring to how Germany recovered almost like a miracle within a short period of time, Bishop Thiagarajah observed that the Wanni could become a role model example in development not just for Sri Lanka alone but to the entire developing countries.

Bishop Thiagarajah said: "The Wanni is a rich agricultural region, a virtual rice bowl of the nation with immense dairy and other farm development potential. Further more the coastline both on the west and east are rich in ocean resources and they need to be developed with permanent wadi structures, fishing boats maintenance facilities and even opportunities to train fisherman including preservation techniques. in fact all these need to be modernized and now is the time to begin work with such

The bishop further said that each township in the Wanni must be so organized that there will development units with satellite villages and agricultural development should be totally farm and home integrated with field and home activities involving the cultivation of rice, small grains in the fields, fruits in well planned orchards, vegetable gardens, dairy cattle, goats and poultry with some of these activities as backyard efforts. This will also enable to set up compost pits and biogas digesters in each home and make all productive ventures environmentally friendly.

Bishop Thiagarajah also referred to how South Korea developed in the rural regions after the devastation caused by the Korean War. The South Koreans gave immense prominence to rural development backed by Credit Unions that were run by the people themselves. "This," he said, "would be ideal for the Wanni region and from there spread over the whole country".



"Our development must be fully focused on the rural areas and make our people feel proud of themselves as capable of being, not only independent but also they have the ability to produce their basic needs. Any kind of industrial activity must be based on the potential to provide for the agricultural needs and also certainly, using agricultural products as the raw material too," Bishop Thiagarajah observed.

As an example, he said, there could be a central hatchery that could supply day-old chicks for farmers on the basis the Magnolia Corporation did for rural families in the Philippines. In this scheme, families participate with the corporation to produce poultry meat in healthy circumstances as the open yards and not in batteries. "When a new set of chicks are delivered, the older ones are collected and for these service the families are paid also adequate feed are supplied too".

"This is the time, "Bishop Thiagarajah said, "the government should build model villages in such a way that every community in the Wanni will be inter-dependently linked in a major development activity that is not only economically active but also educationally appropriate not just the formal type, socially and culturally enriching and spiritually holding the highest values of the faiths with which our country is blessed.



*Our land may have been devastated, our farms, homes, temples, churches, mosques and schools, all dear to us may have been destroyed but we will move forward to the realms of hope and build anew in steadfast faith.*



*we will tend the sick, comfort the hurt, console those who have lost their dear ones and provide for the needy for we are all one family whoever, whatever and wherever we are.*



*The clergy and the laity will work together with intense dedication, endless devotion and total commitment and Wanni will flourish once again.*



**A Visit inside an IDP tent**

*Our children are precious to us. Every one of them is special. We will be their guardians and guide them along the paths of peace and progress.*



**Praying in Hospital**

*when God guides us and in Him we place our trust and follow his directions, we have nothing to fear or be concerned.*



*Bishop Thiagarajah concluded: "The field is rich in potential and the challenge we face promises to be quite pleasing and exciting. This is time for us to place the yoke on our shoulders."*

## Bishop's visit to the second Sinhala Parish to Panadura.



It was on the 21st of June, the Bishop of JDCSI Rt. Rev. Dr. Daniel Thiagarajah made his first visit to the 2nd Sinhala Parish of JDCSI, the Church of Christ the King, in Panadura, The Bishop was received by the congregation in a traditional way. Around sixty members were present for the day's service which was also a special Holy Eucharist Worship.

Bishop's sermon, based on Romans 12:1-2, moved the congregation to rededicate them for the cause of God's Reign. They were called to join the ministerial team of JDCSI without any bias of caste, class, race or language.

The Congregation, moved by the Spirit of the Lord, expressed their happiness to join such a denomination that serves the people of God without any prejudice. The first Sinhala edition of the Book of Prayer of the Church of South India, translated for the first time into Sinhala by the Rev. Srilal Karunaratne, the Priest of the Church, was officially released for use by the Bishop.

The members were overjoyed to receive the blessing of the bishop one by one soon after the worship. Fellowship tea and lunch arranged after the service gave an opportunity for the people to get well acquainted with the Bishop. It was truly an experience of the presence of the Holy Spirit.





Rev. Srilal Karunaratne was among the members of JDCSI that visited the IDP Camps in Vavuniya and Cheddikulam recently. We are happy that he is whole heartedly involved in the diocesan effort to create a Nation consisting of mutual respect for one's own identity, culture, language and tradition which will result in the recognition of pluriformity of the country that is unique for Asia.

## *Opening of Children's Park at Harriet Winslow Girls' Home*

A children's park with all the play equipments like swings spiral slide, climbing apparatus, etc was constructed in the beautiful garden at the JD.,CSI Harriet Winslow Girls' Home at Pandatteruppu. The girls of the home led the visitors in a band procession from the junction. The park was opened by the Bishop, Rt. Rev. Dr. Daniel Thiagarajah. The function was presided over by the manageress of the home Gladys Muthurajah. The guest of honour, the principal of the Pandateruppu Girls' College gave a speech encouraging the children and appreciating the efforts taken by the Jaffna Diocese to meet the needs of the children.





A statue of the image of Karl Baumann, the founder of the KNH organization from Germany which supports the home cast in bronz was unveiled by the bishop. Though the KNH organization works in many countries, this is the first event of a statue erected in honour of Karl Baumann.



Soon after the function the exhibition and certificate awarding ceremony of the Vocational Training Centre for the girls followed.


The exhibits were garments, handicrafts, food items, etc. The vote of thanks was delivered by Mr. A. C. Frances, the manager of the JDCSI Children's Homes. The function ended with a fellowship lunch to all those who attended the events.

உதயதாரகை யூன் 2009

தாரகைச் சிந்தனை

"தமக்குரிய உணவுக்காக ஒருவர் கவலைப்படுவது உடல் சார்ந்தது. பிறருக்குரிய உணவுக்காகக் கவலைப்படுவது ஆன்மீகம் சார்ந்தது."

# நான் யாருக்கு அயலான்?



நமது நாட்டில் கடந்த 30 ஆண்டுகளுக்கு மேலாக இடம்பெற்ற யுத்த அனர்த்தத்தினால் தமிழ் மக்கள் சந்தித்த பேரழிவுகள் சொல்லினும் அடங்காதவை என்பதை அனைவரும் நன்கறிவர். குறிப்பாக கடந்த ஆண்டு முதல் இவ்வாண்டின் மே மாதம் வரை வன்னிப் பெரு நிலப் பரப்பில் வாழ்ந்த மக்களின் வாழ்வியல் தொடர்பான நிலைப்பாடானது அச்சத்திற்கு ள்ளாக்கப்பட்டது. மரண அவலம் நிறைந்த ஒன்றாகக் காணப்பட்டது. வன்னி வாழ் மக்கள் தமது உயிரைக் காப்பாற்றும் நோக்குடன் நாளுக்கு நாள் இடம் பெயர்ந்தவர்களாக ஒரு வகையில் நாடோடி வாழ்க்கை வாழ்ந்தவர்களாகக் காணப்பட்டனர். நாட்டின் ஏனைய பிரதேசங்களுடனான தொடர்பு துண்டிக்கப்பட்ட நிலையில் போதுமான உணவு இன்றி, இருப்பிட வசதி இன்றி, மருத்துவ வசதிகள் இன்றி, போராட்ட வாழ்வு என்பதிலும் பார்க்க வாழ்வே போராட்ட நிலைக்குத் தள்ளப்பட்ட ஒரு சூழலில் வாழ்ந்தனர். வாழ்விற்கும் சாவிற்கும் இடையிலே ஒரு போராட்ட இழுபறி நிலையில் மக்கள் காணப்பட்டனர்.

இராணுவ முன்னெடுப்பைத் தொடர்ந்து வன்னி மண் அரச கட்டுப்பாட்டுக்குள் வந்ததன் பின்னர், முற்று முழுதாக வன்னி வாழ் மக்கள் வவுனியா நகரை வந்தடைந்தனர். உறவுகளை இழந்தவர்களாக, உணர்வுகளை இழந்தவர்களாக, உடமைகளை இழந்தவர்களாக, பூர்வீகக் குடியிருப்புக்களை இழந்தவர்களாக, தமது வாழ்வுண்டு, வழமுண்டு என்று விவசாயத்திற்குப் பேர் போன தமது சொந்த மண்ணை இழந்தவர்களாக இன்று வன்னி வாழ் மக்கள் 'பிளாஸ்டிக் கொட்டகைக்குள்' தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

ஒரு இடத்தின் பொதுவான அமைவிடம் என்பது மக்களின் எண்ணிக்கை, தொகையின் அடிப்படையில்தான் வசதிகளும், வளங்களும் அமையப்பெறும் என்பது உண்மையாகும். ஆனால் திடீர் என ஏறக்குறைய மூன்று இலட்சத்திற்கும் மேற்பட்ட மக்களை எவ்வாறு வவுனியா, செட்டிக்குளம் போன்ற இடங்கள் தாங்கிக் கொள்ள முடியும் என்பது ஒரு கேள்வியாக உள்ளது. பெரும் நிலப்பரப்பு இருப்பதனால் யாரையும், எங்கும் குடியமர்த்த முடியும் என்று கூறுவது பொருத்தமற்ற ஒரு விடயமாகும். பெரும் நிலப்பரப்பிலே குடியமர்த்த அல்லது தற்காலிக குடிசைகளை அமைப்பதனால் மக்களின் பிரச்சனை தீரப் போவது கிடையாது.

சொந்த மண்ணிலே சுதந்திரமாக, மகிழ்வாக வாழ்ந்த மக்களை அடிமைகள் போன்று நான்கு புறமும் முள்ளுக்கம்பிகளுக்கு இடையே, மகிவும் சிறிய கொட்டகைக்குள், கட்டாயத்தின் பேரில் அமர்த்தி இருப்பது என்பது ஒரு வகையில் மனித உரிமை மீறல் ஆகும். இப்படியான ஒரு நெருக்கடியான சூழ்நிலையில் கிறிஸ்தவர்களின், திருச்சபையின் பொறுப்பு என்ன என்பது முன் வைக்கப்படும் ஒரு கேள்வி ஆகும். இது சவால் நிறைந்த பணி. பல பெண்கள் தாம் குளித்த பின்னர் (உடலைச் சுத்தம் பண்ணிய பின்னர்) மாற்று உடுப்பு இன்றி முன்பு தாம் உடுத்தியிருந்த உடுப்பு உலரும் வரை வெய்யிலில் நின்று, உலர்ந்த பின்பு அதே உடுப்பை அணியும் நிலை. சத்தான உணவு இன்றி பல கர்ப்பிணித் தாய்மார் காணப்படுகின்றனர். ஊட்டச் சத்து இன்றி பல சிறார்கள் மயக்கமுறுகின்றனர். நூற்றுக் கணக்கான சிறுவர்களுக்கு பெற்றோர்களே இல்லை. அவர்கள் அநாதரவாக்கப்பட்டவர்கள். பல இளம் கைம்பெண்கள் (விதவைகள்), இளம் வயதினர் சிலருக்கு மனநோய். இது போன்ற பல பிரச்சினைகளுடன் மக்கள் காணப்படுகின்றனர்.

எமது இச் சகோதரங்களை நேரடியாகப் பார்க்கும் போது கண்ணீர் வழிந்தோடுகின்றது. எமது உணர்வுகள் ஏதோ ஒரு வகையில் செயற்படத்தூண்டுகின்றது. எனக்கு அயலான் யார் என்று இயேசுவிடம் திருச்சட்ட அறிஞர் கேட்ட போது, இயேசு நல்ல சமாரியன் உவமையைக் கூறி குரு, லேவியர் ஆகிய இருவரும் குற்றுயிராக இருந்த நபரைக் கண்டு மறு பக்கமாக விலகிச் சென்ற போது, சமாரியனே உதவினார் என்பதனைச் சுட்டிக்காட்டி - ''நீரும் போய் அப்படியே செய்யும்'' என்ற உண்மையைத் திருச்சட்ட அறிஞருக்குக் கூறி வைத்தார் இயேசு. எனக்கு அயலான் யார்? என்று கேட்காது, நான் யாருக்கு அயலானாக இருக்க முடியும்? என்ற சிந்தனையுடன் வன்னி வாழ் மக்கள் மீது எமது சிறப்புப் பார்வையைச் செலுத்திச் செயற்பட முனைய வேண்டும். இதுவே காலத்தின் கட்டாயமாக உள்ளது.

*தயாளன்*

## வவுனியாவிற்கான பேராயரின் விஜயம்

மே மாதம் 29ம் திகதி அன்று தென்னிந்திய திருச்சபை யாழ் ஆதீனத்தின் பேராயர் அறிவர் D.S. தியாகராஜா அவர்களின் தலைமையில் ஒரு குழுவினர் வவுனியா, செட்டிக்குளம் ஆகிய இடங்களுக்குச் சென்று, வன்னிப் பெரு நிலப்பரப்பில் இருந்து இடம் பெயர்ந்த மக்கள் தங்கியிருக்கும் இடைத்தங்கல் முகாம்களைப் பார்வையிட்டதுடன், அங்குள்ள மக்களுடனும் உரையாடி அவர்களது தேவைகளைக் கேட்டறிந்ததுடன் உதவிகள் பலவற்றையும் மேற் கொண்டனர். பலரும் தமது வாழ்வின் ஆதங்கத்தினைப் பேராயரிடம் எடுத்துக் கூறினர். மக்களது உணர்வுகளைப் புரிந்து கொண்ட பேராயர், வன்னிமக்கள் மத்தியில் எதிர்காலத்தில் மேற்கொள்ளப்பட வேண்டிய செயற்திட்டங்கள் குறித்து உரிய நடவடிக்கை எடுக்கும் வகையில் பல திட்டங்களை நடைமுறைப்படுத்த எண்ணியுள்ளார்.

இவ் விஜயத்தின் போது வவுனியா, செட்டிக்குளம் ஆகிய இடங்களில் உள்ள பல இடைத்தங்கல் முகாம்களிலுமுள்ள தென்னிந்திய திருச்சபை அங்கத்தவர்களின் நலன்களையும் பேராயர் குழுவினர் கேட்டறிந்து கொண்டனர். தாம் இடம் பெயர்ந்து வந்திருந்த நிலையிலும், பேராயரைச் சந்தித்து உரையாடிய நிறைவையும் மகிழ்வையும் அவர்களிடம் காணக் கூடியதாக இருந்தது.

இக் குழுவினர் வவுனியா வைத்திய சாலைக்கும் சென்று காயங்களுக்கு உள்ளானவர்களைப் பார்வையிட்டதுடன், அவர்களுக்கு ஆறுதல் கூறி, இறை வேண்டல் செய்து பொருள் உதவிகளையும் வழங்கினர்.

வவுனியாவிற்கான விஜயத்தின் போது பேராயருடன் பேராயர் அம்மா கலாநிதி (திருமதி) தயா தியாகராஜா, அருட் பணியாளர்களான சிறிலால் கருணரட்ண, V.S.தேவகரன், T.செல்வன், V.பத்மதயாளன், திரு. டன்சன் S. சாமுவேல், திரு. R. டானியல் தர்மலிங்கம் ஆகியோர் இடம் பெற்றிருந்தனர்.

## ஊழியர்களுக்கான கூட்டம்

பேராயரின் தலைமையில் தென்னிந்திய திருச்சபை யாழ் ஆதீனத்தின் கிழக்கு மாகாண, மேற்கு மாகாண, தெற்கு மாகாண ஊழியர்களுக்கான ஒரு முழு நாள் கூட்டம் ஆனது 01.06.2009ம் திகதி அன்று கொழும்புத் திருச்சபை மண்டபத்தில் இடம்பெற்றது. இக் கூட்டத்தில் ஒவ்வொரு பிரதேசத்திலும் பணியாற்றும் ஊழியர்கள் தமது அனுபவங்களைப் பகிர்ந்ததுடன், எதிர்காலத்தில் முன்னெடுத்துச் செல்லப்பட வேண்டிய பணிகள், சேவைகள் குறித்தும் ஆராயப்பட்டது. இக் கூட்டத்தில் இருபதிற்கும் மேற்பட்ட ஊழியர்கள் கலந்து கொண்டனர். ஊழியர்களுக்கான இக் கூட்டம் ஆனது மிகவும் பயன் உள்ள ஒன்றாக அமையப் பெற்றது.

"கிறிஸ்தவம் மின்சாரத்தைப் போன்றது. அது ஒரு மனிதனுக்குள் சென்றால் அவனிலிருந்து வெளியே வரவேண்டும்."
- *ரிச்சர்ட் ரெய்ன்ஸ்*

"கிறிஸ்தவர் என்போர் பாவியரே. அன்னார் கிறிஸ்துவின் பள்ளியில் நேர்மையாளராக மாறும் பயிற்சி பெறத் தம்மைச் சேர்த்துக் கொண்டுள்ளனர்."
- *ஹென்றி வார்ட் பேக்கர்*

"பணிவும் அன்பும் உண்மையான சமயத்தின் சாரம். பணிவுள்ளவர் எப்பொழுதும் போற்றப்படுகிறார்"
- *லவேட்டர்*

# யாழ்ப்பாணக் கல்லூரி ஆளுநர் சபையின் புதிய தலைவர்



மேற்படி ஆளுநர் சபையின் நடப்பாண்டிற்கான புதிய தலைவராகத் தென்னிந்திய திருச்சபை யாழ் ஆதீனத்தின் பேராயர் அறிவர் D.S தியாகராஜா அவர்கள் தெரிவு செய்யப்பட்டார். கல்வித்துறையில் மிகவும் பாண்டித்தியம் பெற்ற எமது பேராயர் அவர்கள் யாழ்ப்பாணக் கல்லூரி ஆளுநர் சபைக்குத் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டமை ஆனது கல்லூரியின் வளர்ச்சிப் போக்கிற்கு முக்கிய மைல்கல்லாகும். புதிய தலைவராகத் தெரிவு செய்யப்பட்ட பேராயரை உதயதாரகை வாழ்த்தி நிற்கிறது.

# பாணந்துறையில் எமது ஆதீனத்தின் பணி

பேராயர் அறிவர் D.S தியாகராஜா அவர்களின் தூர நோக்குப் பார்வையின் ஒரு கட்டமாகப் பாணந்துறையில் எமது ஆதீனத்தின் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. கடந்த ஆண்டு தெற்கு மாகாணத்தில் காலியில் (Galle) எமது ஆதீனத்தின் முதலாவது திருச்சபை ஆரம்பிக்கப்பட்டமை அனைவரும் அறிந்த விடயமே. தற்போது அம் மாகாணத்தில் இரண்டாவது திருச்சபை உருவாக்கம் பெற்று உள்ளமை ஆனது ஆதீனத்தின் வளர்ச்சிப் போக்கில் ஏற்பட்டுள்ள பெருமாற்றமே ஆகும்.

பாணந்துறையில் அருட்பணி சிறிலால் கருணரட்ண அவர்களும், அவரது மனைவி சிராணி அவர்களும் சிறந்த பணியாற்றுகின்றனர்.

# பாராட்டி வாழ்த்துகின்றோம்



சாவகச்சேரியைப் பிறப்பிடமாகக் கொண்ட, மேலதிக சொலிசிட்டர் ஜெனரல் ஜயாத்துரை ஞானதாசன் அவர்கள், அண்மையில் ஜனாதிபதி சட்டத் தரணியாகச் சத்தியப் பிரமாணம் செய்து கொண்டார். தனது அயராத முயற்சியால், சட்டத் துறையில் பல முன்னேற்றங்களை எய்தி, இவ் உயர் பதவியை அடைந்தமையை ஒட்டி உதயதாரகை இவரைப் பாராட்டி வாழ்த்துகின்றது. மேலதிக சொலிசிட்டர் ஜெனரல் ஜயாத்துரை ஞானதாசன் அவர்கள், தென்னிந்திய திருச்சபை யாழ் ஆதீனத்தின் கொழும்புத் திருச்சபையின் அங்கத்தவர் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

"அறிவாளியாயிரு உயரத்தில் பறந்து கீழே விழாதே. உயர்வதற்காகப் பணிவுடன் இரு"
- மாஸ்ஸிஞ்சர்



# திருமணப் பதிவு வழிபாடு

சாவகச்சேரியைச் சொந்த இடமாகவும், தற்போது அவுஸ்ரேலியாவில் வசித்து வருபவருமான ஜோயெல் பிரவீன் விஜய குமாரிற்கும், கொழும்புத் திருச்சபையைச் சேர்ந்த சாமலின் நிரஞ்சலா செல்வத்திற்கும் திருமணப் பதிவு வழிபாடானது கொழும்பு தென்னிந்திய திருச்சபையில் 2009 மே மாதம் 23ம் திகதி நடைபெற்றது. இவ் வழிபாட்டை பேராயர் அறிவர் D.S. தியாகராஜா அவர்கள் நடாத்தி வைத்தார்.

# திருமண ஆசீர்வாத வழிபாடு

காரைநகரைச் சொந்த இடமாகவும் தற்போது கொழும்பில் வசித்து வருபவருமான கந்தையா ரஞ்சினிதேவிக்கும், றிச்சேட் குமார சாமிக்கும் திருமண ஆசீர்வாத வழிபாடானது கொழும்பு தென்னிந்திய திருச்சபையில் 2009 யூன் மாதம் 06ம் திகதி மிகவும் சிறப்பாக இடம்பெற்றது. இவ் வழிபாட்டை அருட்கலாநிதி A.C. மதனராஜ் அவர்கள் நடாத்தினார். அருட்பணி V. பத்மதயாளன் கடவுளின் வார்த்தையைப் பகிர்ந்து கொண்டார்.

# திருமணப் பதிவு வழிபாடு

தெல்லிப்பழைத் திருச்சபையைச் சேர்ந்த மேரி திரேசாமலர் ஜெயசீலனுக்கும், A. அருளானந்தத்திற்கும் திருமணப் பதிவு வழிபாடானது கொழும்பு தென்னிந்திய திருச்சபையில் 2009 யூன் 19ம் திகதி சிறப்பான முறையில் இடம்பெற்றது. இவ் வழிபாட்டை அருட்கலாநிதி A.C. மதனராஜ் அவர்கள் நடாத்தினார். வத்தளைத் திருச்சபைக் குரு அருட்பணி R. ஜோய் பிரதீப்குமார் அவர்கள் நல் உபதேசம் வழங்கினார்.

### செய்திகளை எதிர்பார்க்கின்றோம்

எமது ஆதீனத்தின் வெளியீடான உதய தாரகைப் பத்திரிகைக்கு, உங்கள் திருச்சபைகளில் இடம்பெறும் முக்கியமான நிகழ்வுகளைச் செய்தியாக எமக்கு எழுதி அனுப்புங்கள். அதனுடன் உரிய புகைப்படங்களையும் இணைத்து அனுப்பவும். மேலும் உங்கள் ஆக்கங்கள், படைப்புக்களையும் எதிர்பார்க்கின்றோம். தரம் கண்டு பிரசுரிக்கப்படும்.

*அனுப்ப வேண்டிய முகவரி :*
**ஆசிரியர்**
**"உதயதாரகை"**
**36, 5/2, சின்சபா வீதி,**
**கொழும்பு - 06**

"இறைவனது வார்த்தைக்கு உள்ளத்தால் செவிசாய்க்காது வெளித்தோற்றத்திற்கு மட்டும் வீண் போதகராகக் கூடாது"
- புனித அகுஸ்தினார்.

# தமிழ்நாடு இறையியல் கல்லூரியின் புதிய முதல்வர்



மதுரை, அரசரடி தமிழ்நாடு இறையியல் கல்லூரியின் ஆறாவது, புதிய முதல்வராக அறிவர். M. ஞானவரம் அவர்கள் நியமிக்கப்பட்டுள்ளார். இவர் தென்னிந்திய திருச்சபை மதுரை ராமநாடு ஆதீனத்தைச் சேர்ந்தவராவார். கடந்த 24 ஆண்டு களாக, மேற்படி கல்லூரியின் விரிவுரையாளராகக் கடமையாற்றி வருகின்றார். விசேடமாக, புதிய ஏற்பாட்டுத் துறையில் புலமைவாய்ந்த முதல்வர் அவர்கள் பல நூல்கள், ஆக்கங்கள், ஆய்வுக்கட்டுரைகள் முதலியவற்றை எழுதியதுடன், இசைத்துறையிலும் ஆர்வம் கொண்ட இவர், கதாப்பிரசங்கம் செய்வதிலும் சிறந்து விளங்குகிறார் என்பது குறிப்பிடத்தக்கது. எமது ஆதீனத்தின் பல குருமார், தமிழ்நாடு இறையியல் கல்லூரியின், பழைய மாணவர்கள் என்பது சிறப்புக்குரியதாகும். நீண்டகாலமாக எமது ஆதீனத்திற்கும், தமிழ்நாடு இறையியல் கல்லூரிக்கும் இடையில், மிகச் சிறப்பான நல்லுறவு இருந்துவருகிறது. புதிய முதல்வரின் பணி மிகச் சிறப்புற எமது ஆதீனமும், உதயதாரகையும் புதிய முதல்வரை மனதார வாழ்த்துகின்றது.

# நினைவில் நிறுத்த வேண்டிய தினங்கள் யூலை, ஓகஸ்ட் 2009

| | | |
|---|---|---|
| யூலை 03 | - | அப்போஸ்தலன் தூய தோமா தினம் |
| யூலை 05 | - | JDCSI ஞாயிறு |
| யூலை 11 | - | சர்வதேச சனத்தொகை தினம் |
| யூலை 22 | - | மகதலேனா மரியாள் தினம் |
| யூலை 25 | - | அப்போஸ்தலன் தூய யாக்கோபு தினம் |
| யூலை 29 | - | பெத்தானியா மார்த்தாள், மரியாள், லாசரு தினம் |
| ஓகஸ்ட் 03 | - | மிஷனரி ஜேம்ஸ் றிச்சேட் தினம் |
| ஓகஸ்ட் 06 | - | உலக சமாதான தினம் |
| ஓகஸ்ட் 21 | - | பேராயர் D.S. தியாகராஜா திருநிலைப்படுத்தப்பட்ட தினம் |
| ஓகஸ்ட் 21 | - | கிறிஸ்தவ சேவ ஆச்சிரம ஆண்டு நிறைவு தினம் |
| ஓகஸ்ட் 22 | - | மிஷனரி லீவை ஸ்போல்டிங் தினம் |
| ஓகஸ்ட் 24 | - | அப்போஸ்தலன் தூய பர்தலமேயு தினம் |
| ஓகஸ்ட் 29 | - | சர்வதேச விளையாட்டுத் தினம |

"இறைவா நீர் எங்களை உமக்காகப் படைத்திருக்கிறீர், நாங்கள் உம்மிடம் வந்து உம்மைப் பற்றிக் கொள்ளும் வரையில் எங்களுக்கு நிம்மதி இல்லை."
- புனித அகுஸ்தினார்

LIBRARY
1.0 AUG 2009



## அப்பாவுக்காக....

அன்பின் ஓர் தூது அகிலத்துள் என்னை
ஆசிகளுடன் வாழவைக்கும்
அப்பாவே உமக்கு ஆயுள் நீடித்து
வளம் பெற வாழ்த்துக்கள்

அன்புடன் அறிவை இனிதே....
அழகாய் வாழ வழி சமைத்த
ஆசை அப்பாவே உமக்கு
ஆயுள் நீடித்து வளம் பெற வாழ்த்துக்கள்

தந்தையர் தினத்தன்று
தந்தேன் உமக்கோர் தூது
புாரினில் பவளமாய் உம் வாழ்வு
பளிச்சிட வாழ்த்துக்கள்...

தலைக்கு மேல் பொறுப்புடன்
தலைமைப் பொறுப்பையும் தாம் சுமந்து,
தரணியிலே நாம் ஜெமித்திடவே
தன் பணியைச் சிறப்புடனே செய்திடுவார்

தன் பிள்ளையின் அறிவுப்பசியைப் போக்கிடவே,
அன்புடன் கற்க வைத்திடுவார்
அகிலத்தில் தன் மகன்/மகள் உயர்ந்திடவே
அருமையாகப் பாடம் சொல்லிடுவார்

புதுமைமிகு இவ்வுலகிலே,
புதுமைகள் பல படைத்திடவே
கருத்துடன் கற்க வைத்திடுவார்
கருணைதனை நெஞ்சில் நினைத்திடுவார்

இனிய உறவாம் என் தந்தை
இதயம் உயர்ந்திடவே
இனிதாய் நாமும் வாழ்த்துகிறோம்
இனிய இத்தினம் தனிலே....

*செல்வி. M. ரம்யா*
*(ஆசிரியை)*

*(21.06.2009 ம் திகதியன்று தந்தையர் தினம் ஆகையால் அதனையொட்டி இக் கவிதை பிரசுரிக்கப்படுகின்றது.)*

FATHER'S DAY

**தந்தையர் தினம்**
**21.06.2009**

**அன்புள்ளம் கொண்ட அனைத்துத் தந்தையர்களுக்கும் உதயதாரகை நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறது.**

## திருமறைப் படிப்பு

பேராயர் அம்மா திருமதி (கலாநிதி) தயா தியாகராஜா அவர்களினால் பிரதி புதன்கிழமை தோறும் காலை 9.30மணி முதல் 11.30 மணி வரை கொழும்பு தென்னிந்திய திருச்சபையில் திருமறைப்படிப்பு நடாத்தப்பட்டு வருகின்றது. பெண்ணியப் பார்வையில் திருமறையைப் படிக்கவும், புதிய விளக்கங்கள் கொடுக்கப்படும் வகையில் இத் திருமறைப்படிப்பு இடம்பெற்று வருகின்றது. எமது ஆதீனத்தின் பெண்கள் மட்டுமல்ல, ஏனைய திருச்சபைகளின் பெண்களும் இதில் கலந்து கொண்டு திருமறை அறிவை வளர்த்தெடுக்க இம்முயற்சி ஏதுவாக அமையும் என்பது திண்ணம்.

இத் திருமறைப் படிப்பு ஆனது தென்னிந்திய திருச்சபை யாழ் ஆதினத்தின் ஒரு செயற்பாடாகும் என்பது குறிப்பிடத்தக்கது.

"மனிதன் ஓர் உண்மையைக் கண்டுபிடித்தான் என்றால், இருட்டறையில் ஓர் தீபத்தை ஏற்றினான் என்று பொருள்" - *இங்கர்சால்*

## திடப்படுத்தல் வழிபாடுகள்.



### *சாவகச்சேரி*

சாகவக்சேரி திருச்சபையில் 2009 ஏப்ரல் 19ம் திகதி பேராயர் அவர்களினால் ஏழு பேர் திடப்படுத்தல் பெற்றுத் திருச்சபையின் முழு அங்கத்தினராகச் சேர்த்துக் கொள்ளப்பட்டனர். இவ்வழிபாட்டின் போது பேராயருக்கு உதவியாகச் சபைக்குரு அருட்பணி K.W.J. தேவசகாயம், ஆதீனச் செயலாளர் அருட்பணி I. ராஜ்குமார் ஆகியோர் உடனிருந்தனர். முன்னாள் பேராயர் S. ஜெபநேசன் அவர்களும் இவ்வழிபாட்டில் கலந்துகொண்டார். வழிபாட்டின் பின் அனைவரும் ஐக்கிய உணவில் கலந்து மகிழ்ந்தனர்.

### *வத்தளை:*

வத்தளைத் திருச்சபையில் 2009 மே மாதம் 31ம் திகதி பேராயர் அவர்களினால் 07 பேர் திடப்படுத்தல் பெற்றுத் திருச்சபையின் முழு அங்கத்தினராகச் சேர்த்துக் கொள்ளப்பட்டனர். இவ் வழிபாட்டின் போது பேராயருக்கு உதவியாகச் சபைக்குரு அருட்பணி R. ஜோய் பிரதீப்குமார் உடனிருந்தார். வழிபாட்டின் பின் அனைவரும் காலை ஐக்கிய உணவில் கலந்து மகிழ்வுற்றனர்.

### *கொழும்பு*

2009 யூன் 07ம் திகதி கொழும்புத் திருச்சபையில் பேராயர் அவர்களினால் 02 பேர் திடப்படுத்தல் பெற்றுத் திருச்சபையின் முழு அங்கத்தினராகச் சேர்க்கப்பட்டனர். இத் திடப்படுத்தல் வழிபாட்டின் போது பேராயருக்கு உதவியாக அருட்பணியாளர்களான A.C மதனராஜ், V. பத்மதயாளன் ஆகியோர் உடனிருந்தனர். வழிபாட்டைத் தொடர்ந்து வழமை போல் காலை ஐக்கிய உணவு இடம்பெற்றது.

## பர்னபா - Barnabas

யூன் மாதம் 11ம் திகதியானது திருச்சபை நாட்காட்டியின் அடிப்படையில் பர்னபாவை நினைவு கூரும் வகையில் பிரத்தியேகப்படுத்தப்பட்டுள்ளது. ஆகவே பர்னபா பற்றிய சில உண்மைகளைக் கருத்தியல் ரீதியாக வெளிப்படுத்தும் வகையில் இக் கட்டுரை அமையப் பெறுகின்றது.

திருத்தூதர் பணிகள் நூலில் சிலரைக் குறித்து மிகவும் அதிகமாகக் கூறப்பட்டுள்ளது. அதே போன்று திருச்சபையிலும் அருளுரை நேரம், திருமறைப்படிப்பு நேரம் போன்றவற்றில் திருத்தூதர் பணிகள் நூலில் இடம்பெற்றுள்ள சிலரைப் பற்றியே குறிப்புக்கள் கூறப்படுவதும், பேசப்படுவதும், ஆராயப்படுவதும் வழமையாக இடம்பெறும் ஒரு விடயமாகும். ஆனால் திருத்தூதர் பணிகள் நூலில் இடம்பெற்றுள்ள பர்னபாவைக் குறித்துப் பேசப்படுவது சற்றுக் குறைவாகவே உள்ளது. எனவே இப் பகுதியில் பர்னபாவைக் குறித்து ஓரளவு ஆராயப்படுவது பொருத்தமானதாக அமைகிறது.

1. திருத்தூதர் பணிகள் 4:36 - 37 - பர்னபாவைக் குறித்து இங்குதான் முதலாவது பார்க்கிறோம். சைப்பிரசு தீவைச் சேர்ந்தவர். ''ஊக்குவிக்கும் பண்பு கொண்டவர்'' என்று திருத்தூதர்களால் அழைக்கப்பட்டவர். இவர் ஒரு லேவியர். ஆதித் திருச்சபையின் சிறப்பியல்புகளுக்கு ஏற்ப தனக்குண்டானவற்றை விற்று அதன் பணத்தைத் திருத்தூதர்களது காலடியில் வைத்ததன் மூலம் திருச்சபையின் வளர்ச்சிக்கு முக்கிய பங்களிப்புச் செய்தார்.

2. திருத்தூதர் பணிகள் 9 : 26 - 28 - சவுலை திருத்தூதர்களிடம் அழைத்து வந்து, முதன் முதலாக அறிமுகம் செய்து வைத்தார். சவுலை அறிமுகம் செய்து வைப்பது என்பது ஒரு இலகுவான செயல் அல்ல, ஏனெனில் சவுல் ஒரு சீடர் என்பதை நம்பாமல் அனைவரும் சவுலைக் கண்டு அஞ்சினர். இப்படியான ஒரு சூழலில் சவுலை அறிமுகம் செய்யும் போது பின்வரும் மூன்று விடயங்களை வலியுறுத்துகின்றார்.

   1. வழியில் ஆண்டவரைப் பார்த்ததை.
   2. வழியில் ஆண்டவர் அவரோடு பேசியதை.
   3. தமஸ்குவில் இயேசுவின் பெயரால் துணிவுடன் உரையாடியது பற்றியும் பர்னபா எடுத்துக் கூறினார்.

3. திருத்தூதர் பணிகள் 11 : 19 - 26 - ஸ்தேவானின் மரணத்தை அடுத்து பெரும் துன்புறுத்தல் ஏற்பட்ட போது, பலரும் சிதறிப் போயினர். அச் சூழ்நிலையில் சைப்பிரசு, சிரேன் ஆகிய இடங்களைச் சேர்ந்த சிலர் அந்தியோகியாவுக்கு வந்து கிரேக்கருக்கு நற்செய்தியை அறிவித்தார்கள். இதனை அறிந்து கொண்ட எருசலேம் திருச்சபையினர் பர்னபாவை அந்தியோகியாவுக்கு அனுப்புகின்றனர். பர்னபா அங்கு வந்த போது கடவுளின் அருள் செயலைக் கண்டவராக மனமகிழ்ச்சியுடன் அனைவரையும் ஊக்கப்படுத்தினார்.

   பர்னபாவின் இரண்டு பணிகள் இங்கு சுட்டிக்காட்டப்படுகின்றது.
   1. அவர் நல்லவர்.
   2. தூய ஆவியால் ஆட்கொள்ளப்பட்டவர்.

   பர்னபா கூறிய ஊக்கம் யாதெனில் - உறுதியான உள்ளத்தோடு ஆண்டவரைச் சாந்திருங்கள் என்பதாகும். ஏனெனில் இதுவே தேவையான ஒன்றாகப் பர்னபாவால் புரியப்பட்டது. 11: 23ம் வசனத்திலே கடவுளின் அருள் செயலைக் கண்டபோது மகிழ்ச்சியடைந்தார் என்பது, இங்கே கடவுளின் அருள் செயல் என்பது - புற இனத்தவர்களும் கடவுளின் மக்கள் ஆகலாம் என்ற உண்மையே ஆகும்.

4. திருத்தூதர் பணிகள் 11 : 27 - 30 - புதிய சபை ஆனது யூதேயாவில் குடியிருக்கிற சகோதரர்களின் துன்பத்திலே பங்கு பெறத் தொடங்குகிறது. பஞ்சத்தின்போது ஏற்பட்ட நிலைமையினைப் போக்குவதற்கு அனுப்பப்பட்ட பொருளுதவியைப் பர்னபாவும் எடுத்துச் செல்கின்றார்.

5. திருத்தூதர் பணிகள் 13 : 1-3 - பவுலின் முதலாவது தூதுரைப் பயணம் 13ம் அதிகாரத்தில் இருந்து ஆரம்பமாகின்றது. இப் பகுதியில் குறிப்பிடப்படும் ஐந்து நபர்களுள் பர்னபாவும் ஒருவர். இவர்கள் இறைவாக்கினராகவும், போதகராகவும் இருந்தனர். பர்னபாவும், பவுலும் ஒரு தனிப்பட்ட பணிக்கெனப் பிரித்தெடுக்கப் படுகிறார்கள். பவுலுடைய முதலாவது தூதுரைப் பயணத்தில் உடன் ஊழியனாகப் பர்னபாவும் தூய ஆவியால் பிரத்தியேகப்படுத்தப்படுகின்றார்.

6. திருத்தூதர் பணிகள் 15 : 36 - 41 - பவுலின் இரண்டாம் தூதுரைப் பயணத்தில், யோவான் மாற்குவின் பேரில் ஏற்பட்ட தர்க்கத்தினால் பவுலும், பர்னபாவும் பிரிகின்றனர். ஆனால் திருச்சபையின் பணியில் எவ்விதமான குழப்பமும் ஏற்படவில்லை. பர்னபா தனது இனத்தவரான மாற்குவைக் கூட்டிக்கொண்டு சைப்பிரசுக்குச் சென்றார்.

இச் சம்பவத்துடன் பர்னபாவைப் பற்றிய குறிப்புகள் திருத்தூதர் பணிகளில் முடிவடைகிறது.

**ஆக்கம்**
**அருட்பணி வே. பத்மதயாளன்**

"விசுவாசிகள் அனைவரும் குருத்துவப் பணிக்குரியவர்களே" - *மாட்டின் லூத்தர்*

"உபத்திரங்கள் இல்லாத இடத்தில் அல்ல, உபத்திரங்கள் நிறைந்துள்ள இடத்திலேயே கடவுளுடைய அருளை முழுமையாக உணர்ந்திடலாம்"

## BISHOP BEING WELCOMED CHILDREN'S HOME IN NUWERE ELIYA



Ministry among the people of the hill country especially among the children was started on the 10th of April 1999. The home for the Girls was named after late Bishop Ambalavanar. The home for the boys, Prinz Boys' Home was started later with the help of Mr. Udo Prinz from Germany. The 10th year anniversary was celebrated on the 2nd of May. A service of Thanksgiving was celebrated in the church. Bishop Daniel Thiagarajah conducted the service assisted by the pastor Rev. Antony Sawarimuthu. Special songs and prayers were led by the children. Eight children got confirmed as full members of the church. Nine workers including pastors of the Jaffna Diocese of the Church of South India who minister in the hill country along with the priests from Anglican, Lutheran, Methodist and Simirna churches also joined in the worship service.



A public meeting was inaugurated with the lighting of the traditional oil lamp by the special guests following the worship service conducted by Mrs. Jeyaranee Antony. The Bishop, the principals of the schools where the children study, the teachers, the teachers of the Day Care centres run by the Diocese, the Police woman in charge of the area and many other dignitaries of the town were honoured. The principal Mrs. Arokiam of the Good Rest convent, in her speech pointed out that their band team and netball team depend mainly on the children from this home. In the history of the school, the first child to enter the University was from this home she said. The other guests of honour gave greetings encouraged the children, and appreciated Rev & Mrs Antony's untiring ministry among the children.

Prizes were given to the children who performed well in handicraft, dance, art, essay competition, singing etc. It is remarkable that eight girls got good results in the GCE/OL examination and qualified to continue in the Advanced Level. Bishop as a kind gesture, and to encourage the children promised to give Rs. 1000/- to the children of grade five of these two schools. The function came to an end with a fellowship lunch to all those who attended.

## Lay Training and Evangelism Centre in the Hill Country

A training centre for the Evangelists was declared open by the Bishop on Easter Sunday on the land acquired by the Diocese. The big bungalow is also to be used as the Head Quarters of the Hill Country of the Jaffna Diocese. It was a glorious occasion where members from the 18 churches in the Hill country participated. The people went on a long procession, singing praise songs up the hill to the bungalow.










Nine members were confirmed on that day followed by the communion service conducted by the Bishop and assisted by Rev. Joseph Thiagarajah and Rev. Antony Sawarimuthu, who serve as the area ministers of Hatton district and Nuwera Eliya district respectively.







Plans are underway to start Day Care Centre, Vocational Training Centre and Free Education Classes. The function came to an end with a fellowship lunch in which all those who came participated.

## Confirmation Services



Confirmation services were held in Wattala CSI Church and Colombo CSI Church on 31st of May and 07th of June respectively. Rev. Pradeepkumar is the pastor in charge of Wattala church is also involved in music ministry.







Following the confirmation services, Holy Communion services were conducted, which was followed by the fellowship breakfast in both churches.